# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C No. 96/2021 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 1 |
| Name | : ஜெயப்பாண்டியன். |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.01.2024.

\- - - - - - -

1 வது எதிரி ஆஜர். 2 வது ஆஜரில்லை. மனுத் தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது வாலாந்தூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்துவருகிறேன். சம்பவத்தின்போது செக்கானூரணி காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராக பணிபுரிந்துவந்தேன். கடந்த 21.11.2018 ஆம் தேதி காலை சுமார் 06.30 மணிக்கு பயிற்சி சார்பு ஆய்வாளருடன் நானும், கிரேடு 1 முதல்நிலைக் காவலர் 624 இளையராஜாவுடன் மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து சென்றோம். கருமாத்தூர் பாலூத்துப் பட்டி மெயின்ரோட்டில் வடக்கம் பட்டி சுடுகாட்டிற்கு

அருகே டி.என்.59 ஏஎப். 2765 என்ற டி.வி.எஸ். ஸ்டார் சிட்டி பைக்குடன் நின்றிருந்தவரை விசாரித்தபோது, பின்னர் பெயர் மற்றும் விலாசம் கேட்டுத் தெரிந்துகொண்ட தேவராஜ், வயது 38/18, த/பெ. வைரவன் என்பவரும் தம்பிராஜ், வயது 42, த/பெ. காமராஜ் என்பவரையும் விசாரிக்க முன்னுக்குப் பின் முரணனாக பதில் சொன்னார்கள். மேலும் விசாரிக்க அவர்கள் பாண்டிச்சேரியிலிருந்து குறைவான விலையில் மதுபாட்டில்களை வாங்கிவந்து விசேசங்கள், பார்ட்டிகளுக்கு கொடுப்பதற்காக சுடுகாட்டிற்கு அருகே மறைத்து வைக்கப்பட்டிருந்து சாக்குப் பையில்கட்டியிலிருந்த 750 எம்.எல். கொண்ட ஸ்பீடு பிராந்தி லேபிள் ஒட்டப்பட்ட 169 பாட்டில்களும், கிரீன் மேஜிக் லேபிள் ஒட்டப்பட்ட 1 பாட்டிலும் வைத்திருந்தார்கள். இருவரும் அவற்றைப் பிரித்து விற்பனை செய்ய எடுத்துச்செல்ல வழிப்போக்கு வாகனத்திற்கு காத்திருந்ததாகச் சொன்னார்கள். அனைத்து பாட்டில்களும் மூடி திறந்து மீண்டும் மூடிய நிலையில் இருந்தது. அதில் 2 பாட்டில்களை எடுத்து நுகர்ந்து பார்த்தபோது நச்சுத் தன்மை நெடிவாடை வந்தது. இதைக் உட்கொண்டால் உயிருக்கும், உடலுக்கும் ஆபத்து ஏற்படும் என்ற காரணம் கூறி இருவரையும் கைது செய்தோம். தேவராஜ் என்பவர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை ஆய்வளார் பதிவு செய்தார். பொதுமக்கள் யாரும் இல்லாததால் நாங்கள் சாட்சியாக கையொப்பம் செய்தோம். ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்து சான்றுப் பொருட்களைக் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியிலும் நாங்கள் கையொப்பம் செய்தோம். மாதிரிக்காக 2 பாட்டில்களை வெள்ளைத் துணியில் கட்டி மதுரை, வட்டார தடய அறிவியலுக்கு அனுப்பினோம். 10 மணிக்கு எதிரிகள் மற்றும் சொத்துக்குளும் நிலையம் வந்தோம். குற்ற எண். 378/2018, பிரிவுகள் 4 (1) A, 4 (1) aaa TNP Act படியும் உடனிணைந்த

பிரிவு 328 இதச படியும் சார்பு ஆய்வாளர் வழக்குப் பதிவு செய்தார். ஆய்வளாருக்கு உதவியாக இருந்தோம். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை -

நாங்கள் 3 பேரும் ஒரே வாகனத்தில் சென்றோமோ அல்லது தனித்தனி வாகனத்தில் சென்றோமா என்றால் சார்பு ஆய்வளார் ஒரு வாகனத்திலும் நானும் காவலரும் ஒரு வாகனத்திலும் சென்றோம். எனக்கு அன்று பகல் நேர டியுட்டிதான். சம்பவ நடந்ததாகச் சொல்லப்படும் காவல் நிலையத்திலிருந்து சுமார் 10 கி. மீ. தூரம் இருக்கும் என்றால் சரிதான். நாங்கள் காவல் நிலையத்திலிருந்துதான் நாங்கள் 3 பேரும் புறப்பட்டோம். நாங்கள் புறப்படும்போது எத்தனை மணி என்றால் 6 மணியிலிருந்து 6.15 மணிக்குள் இருக்கும். பொதுநாட்குறிப்பு நிலையத்தில் காலை 7 மணிக்கு பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். பொதுநாட்குறிப்பில் எங்கள் பணி சம்பந்தமாக பதிவு செய்யப்படவில்லை என்றால் ஞாபகமில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தை காட்டக்கூடிய வரைபடமோ, மகசரோ ஆய்வாளர் தயார் செய்தாரா என்றால் தயார் செய்யவில்லை. சம்பவ இடத்தில் 1 மணி நேரத்திற்கு மேல் இருந்தோம். எதிரிகள் சாக்குப் பையோடு 169 ஸ்பீடி பிராந்தி, 1 கிரீன் பிராந்தி பாட்டில்கள் வைத்திருந்திருந்ததை ஊர்ஜிதப்படுத்தக்கூடிய புகைப்படம் எதுவும் அந்த இடத்தில் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியை கைப்பட எழுதியது சார்பு ஆய்வாளர்தான். நான் சாட்சிக் கையெழுத்துச் செய்தேன். தேவராஜ் மற்றும் தம்பிராஜிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கப்பட்டதா என்றால் தேவராஜிடம் மட்டும்தான் வாங்கப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலத்தில் தம்பிராஜிடம் கையெழுத்து வாங்கவில்லை. சாட்ரவு ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலரையோ, தலையாரியையோ சம்பவ

இடத்திற்கு அழைத்துச் செல்லவில்லை என்றால் சரிதான். பாண்டிச்சேரி அரசுக்குச் சொந்தமான பிராந்தி பாட்டில்கள் என்பதை காண்பிக்கக்கூடிய புகைப்படம் எடுக்கப்படவில்லை. நான் சொன்னதுபோல், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரிகளிடமிருந்து எந்த மதுபாட்டில்களும் கைப்பற்றவில்லை என்றும், 1ம் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை என்றாலும் சரியல்ல. புள்ளி விவரத்திற்காக மேல் அதிகாரிகளின் உத்தரவின்பேரில் பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டு, அதற்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம் / P.S. ரஸ்கின் ராஜ், 12.01.2024.
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.